# இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் காணப்படும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை / தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.08.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "**பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே**" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும் இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்).

**குறிப்பு:- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.**

(1) **ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்) (வெற்றிடங்களின் எண்ணிக்கை 01)**
**ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) (வெற்றிடங்களின் எண்ணிக்கை 01)**
**ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) (வெற்றிடங்களின் எண்ணிக்கை 04)**

**1.1. சம்பள அளவுத்திட்டம்**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 81,610– 3 x 1,360/ 13 x 1,850 – 109,740/-ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் சுமார் ரூ. 116,000/= ஆகும்.)

**1.2. வயதெல்லை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**1.3. கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்/ கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் உரிய மொழியில் திறமைச் சித்தியும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல்.

**அல்லது**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் உரிய மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கணிதம் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**உரிய மொழி** - ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) பதவிக்கு தமிழ் மொழி / ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) பதவிக்கு ஆங்கில மொழி / ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்) பதவிக்கு சிங்கள மொழி )

### 1.4. தொழில்சார் தகைமைகள்

அரசாங்கத்தின்/அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து/சொல் செயலாக்கம் (word processing) பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல். (அரச/பகுதியளவு அரச நிறுவனமொன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடைய விண்ணப்பதாரர்களுக்கு இச் சான்றிதழ் கட்டாயமில்லை).

விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்துக்கான வேகங்களை அடைதல் வேண்டும்.

#### 1.4.1. ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்)

சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

#### 1.4.2. ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)

சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்)

#### 1.4.3. ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)

சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

## (2) குழு அறிக்கையாளர் (ஆங்கிலம்) (வெற்றிடங்களின் எண்ணிக்கை 04)

### 2.1. சம்பள அளவுத்திட்டம்

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 74,810– 9 x 1,360/ 6 x 1,670 – 97,070/- ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் சுமார் ரூ. 109,000/= ஆகும்.)

### 2.2 வயதெல்லை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

### 2.3. கல்வித் தகைமைகள்

(அ) கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் / கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல்.

**அல்லது**

(ஆ) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கணிதம் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2.4. **தொழில்சார் தகைமைகள்**

அரசாங்கத்தின்/அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து/சொல் செயலாக்கம் (word processing) பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல். (அரச/பகுதியளவு அரச நிறுவனமொன்றில் சுருக்கெழுத்தாளர் பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடைய விண்ணப்பதாரர்களுக்கு இச் சான்றிதழ் கட்டாயமில்லை).

விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்துக்கான வேகங்களை அடைதல் வேண்டும்.

சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் (90% செவ்வையுடன்)
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் (95% செவ்வையுடன்)

(3) **பதவியில் நிரந்தரமாக்குவது பற்றிய நிபந்தனைகள்:**

மேற்படி பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள் தட்டெழுத்து /சுருக்கெழுத்து வேகப் பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். இந்தப் பரீட்சையில் அவ்வாறு சித்தியடையத் தவறும் பட்சத்தில் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கு அல்லது முன்பிருந்த சேவைக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உள்ளாவர்.

(4) **ஆட்சேர்ப்பு முறை**

விண்ணப்பதாரர்கள் சுருக்கெழுத்து வேகப் பரீட்சை, மொழி அறிவு, பதிப்பு பற்றிய பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(சுருக்கெழுத்து வேகப் பரீட்சையில், விண்ணப்பித்த பதவிக்குரியதாக வேகமாக வாசிக்கப்படும் ஒரு பந்தியை சுருக்கெழுத்தில் குறித்துக்கொள்வதும், அதன் பின்னர் தரப்படும் நேரத்திற்குள் 90% செவ்வையுடன் அதனைப் பார்த்துப் படியெழுதுவதும் விண்ணப்பதாரர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.)

**4.1 நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல்கள் பின்வருமாறு அமையும்.**

| | |
|---|---|
| i | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| ii | மொழி மற்றும் தொடர்பாடல் திறன் |
| iii | சமகாலத் தகவல்கள் தொடர்பான பொது அறிவு |
| iv | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை |

(5) **சேவையில் அமர்த்தும் நியதிகளும், நிபந்தனைகளும் -**

(அ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. இப் பதவிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் உட்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண்கால அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன், அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஆளொருவர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவர் ஒரு வருட கால பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடையதான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். இவர்கள் மருத்துவ பரிசோதனையொன்றுக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

(ஈ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கையொன்றும் பெற்றுக் கொள்ளப்படும்.

**(6)** விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

**(7)** அரச / மாகாண அரச நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**(8)** பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

**(9)** விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

**(10)** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும், பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2025 …………..... ஆம் திகதி.